# ஒப்பந்தப்புள்ளி படிவம்

## 1432-ம் பசலிக்கான பித்தளை விளக்குகள் சப்ளை

01.07.2022 முதல் 30-06-2023 முடிய உண்டான காலத்திற்கு (பசலி 1432) **15.07.2022ம் தேதி பிற்பகல் 1.00 மணி வரை** கொடுக்கவேண்டிய ஒப்பந்தப்புள்ளி படிவம்

| வரிசை எண் | பொருளின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும் ( அனைத்து வரிகள் உள்பட ) ரூ. பை |
|---|---|---|
| 1 | பித்தளை விளக்கின் முன்புறம் தங்கரத முருகன் உருவப்படம் நன்கு தெரியும் வண்ணமும், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி என்ற எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். சப்ளை செய்யப்படும் பித்தளை விளக்கின் விவரம்<br>அ). உயரம் 13 செ.மீ.<br>ஆ) அடிவட்ட அகலம் 7 செ.மீ.<br>இ). மேல் வட்ட அகலம் 9 செ.மீ.<br>ஈ). எடை 250 கிராம<br>உ) பித்தளை விளக்கில் Copper 62 to 65 %, Zinc 38 to 35% என்ற சதவிகிதம் கலந்து இருக்க வேண்டும். வேறு உலோகங்கள் கலத்தல் கூடாது. | |

குறிப்பு.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நன்கு படித்து அறிந்து கையொப்பமிட வேண்டும்.
2. அசல் சால்வன்சி சான்றிதழ் உள்ளவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முடியும். வைப்புத் தொகை கட்டினாலும், உரிய முறையில் சால்வன்சி இல்லையெனில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
3. ஒப்பந்தப்புள்ளி படிவத்திலுள்ள அனைத்து நிபந்தனைகளை ஏற்று இந்த ஒப்பந்தப்புள்ளியைக் கொடுக்க வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரி, விற்பனை வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.
5. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (**PAN CARD**) நகல் இணைக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம்
(முழு விலாசத்துடன்)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## 1432ம் பசலிக்கு பித்தளை விளக்குகள் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடியவுள்ள காலமான 1432ம் பசலிக்கு தங்கரத உபயதார்களுக்கு வழங்குவதற்கு பித்தளை விளக்குகள் சப்ளை செய்வதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **15.07.2022 பிற்பகல் 1.00 மணிக்குள்** கொடுக்க வேண்டும். மேற்காணும் தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. **15.07.2022 பிற்பகல் 3.00 மணிக்கு** ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் விற்பனை வரி , ஸ்தல வரி , கலால்வரி உட்பட பித்தளை விளக்கு 1க்கு விலைவிபரம் (எண் மற்றும் எழுத்தால் ) குறிப்பிட வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் தெளிவாக ஒப்பந்தப்புள்ளிதாரரின் முழு முகவரியை குறிப்பிட வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) வங்கி வரைவோலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். இவையில்லாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. ஒப்பந்தப்புள்ளிதாரர் 1432ம் பசலி முழுவதும் சப்ளை செய்வதாக இருக்கும் பித்தளை விளக்கு ஒன்று மட்டும் மாதிரிக்காக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

6. 01.06.2022ம் தேதிக்கு பின்னர் வட்டாட்சியரிடம் பெற்று ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரிலுள்ள ரூ.1,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம்)-க்கான அசல் சால்வன்சி சான்றிதழ் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.

7. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளி உறையின் மீது பெறுநர் என்ற இடத்தில் இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருககோயில், பழனி என்ற முகவரி குறிப்பிட வேண்டும்.

8. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் சப்ளை செய்வதாக குறிப்பிட்டுள்ள பொருளின் விபரத்தினை ஒப்பந்தப்புள்ளி உரையின் மேல் குறிப்பிட வேண்டும்.

9. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் ரூ.20/-க்கான முத்திரை காகிதத்தில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

10. தங்கரதப்பிரிவு பொறுப்பாளரிடம் அவ்வப்பொழுது ஒப்பந்தப்புள்ளிதாரரே நேரில் எழுத்து மூலம் கொள்முதல் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். கொள்முதல் சீட்டிலுள்ள விவரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு தேவையான நேரத்தில் ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்ட மாதிரிப்படியே தங்குதடையின்றி பித்தளை விளக்குகள் சப்ளை செய்ய வேண்டும்.

11. அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால், திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிமார்க்கெட்டில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால், ஏற்படும் கூடுதல் செலவினங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும். மற்றும் திருக்கோயிலால் பிடித்தம் செய்யப்பட்ட 10% பில் தொகையிலிருந்தும், வைப்பு தொகையிலிருந்தும் மற்றும் பட்டியல் தொகையிலிருந்தும் மேற்படி இழப்பு தொகை பிடித்தம் செய்யப்படும்.

12 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் பித்தளை விளக்குகள் நல்ல தரமானதாக இருக்க வேண்டும்.

13. பித்தளை விளக்கின் முன்புறம் "தங்கரத முருகன் உருவப்படமும், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி என்ற எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். டெண்டரின் போது இரு மாதிரி விளக்குகள் கொண்டு வர வேண்டும். அல்லது திருக்கோயில் நிர்வாகம் கொடுக்கும் மாதிரியின்படி செய்து வழங்க வேண்டும்.

14. விஷேச காலங்கள் மற்றும் பக்தர்கள் அதிகமாக வரும் காலங்களில் அதிகமான அளவு தேவைப்பட்டியலின்படி தங்கு தடையின்றி தரமான பித்தளை விளக்குகள் ஒப்பந்தப்புள்ளியில் இணைத்திருந்த மாதிரிப்படியே சப்ளை செய்ய வேண்டும்.

15. சப்ளை செய்யப்படும் பித்தளை விளக்குகள் ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது சொந்தப்பொறுப்பிலும் மற்றும் செலவிலும் மலைக்கோயிலில் உள்ள தங்கரதப் பிரிவிற்கு எடுத்துச் சென்று சப்ளை செய்ய வேண்டும். வின்ச் மூலமாக கொண்டு சென்றால் அதற்கான கட்டணத்தை கணக்கிட்டுப் பிடித்தம் செய்யப்படும்.

16. பித்தளை விளக்குகள் தங்கரதப்பிரிவு பொறுப்பாளரால் நன்றாகப் பரிசோதிக்கப்பட்டு அவைகளின் தரம் நன்றாக இருப்பதாக ஏற்றுக் கொண்டால் உடன் அவர்கள் முன்னிலையில் எண்ணிக் காண்பித்து சப்ளை செய்ய வேண்டும்.

17. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்பட்ட பித்தளை விளக்குகளுக்குரிய காசோலை வழங்குவதில் நிர்வாக ரீதியாக ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்த காலதாமதத்தை காரணம் காட்டாமல் தொடர்ந்து தேவைப்பட்டியல் பெற்று தரமான பித்தளை விளக்குகள் சப்ளை செய்ய வேண்டும்.

18. ஒப்பந்தப்புள்ளிதாரர் தமது சார்பாகவோ, வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது டெண்டரை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள்டெண்டர் விடவோ கூடாது.

19. ஒப்பந்தப்புள்ளிதாரர் திருக்கோயில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும் நடைமுறை விதிகளுக்கும் சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, சட்ட திட்டங்களுக்குட்பட்டும் சப்ளை செய்ய வேண்டும்.

20. பித்தளை விளக்குகள் தேவைப்பட்டியல்படி தேவையான காலத்தில் தேவையான அளவு சப்ளை செய்யாவிட்டாலோ, அல்லது டெண்டர் நிபந்தனைகளின்படி நடந்து கொள்ளாவிட்டாலோ ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படும்.

21. இதனால் திருக்கோயிலுக்குத் தேவையான பித்தளை விளக்குகள் வெளி மார்க்கெட்டிலோ அல்லது விலைப்புள்ளிகள் பெற்றோ அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் மூலமோ கொள்முதல் செய்யப்படும். இவ்வாறு கொள்முதல் செய்வதால் திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் இதற்கு முன் டெண்டர்தாரரே பொறுப்பாக்கப்பட்டு இந்த இழப்புத் தொகையினை முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே செலுத்த வேண்டும். தவறினால், நீதிமன்றம் மூலம் நீதிமன்ற செலவுடன் வட்டியுடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

22. ஒப்பந்தப்புள்ளியை காரணம் கூறாமல் ஏற்கவோ நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

23. ஒப்பந்தப்புள்ளி, சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரவர்கள் அங்கீகாரத்திற்குட்பட்டது.

24. ஒப்பந்தப்புள்ளிதாரா் பித்தளை விளக்குகள் சப்ளை செய்வதில் இயற்கையாகவோ அல்லது வேறு ஏதேனும் காரணத்தினாலோ இடையூறு ஏற்பட்டால் அதற்கு திருக்கோயில் நிர்வாகம் ஏதும் பொறுப்பேற்காது.

25. சப்ளை செய்யப்படும் பித்தளை விளக்குகள் ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கும் பட்டியல் தொகை ஒவ்வொன்றிற்கும் 10% பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை வழங்கப்படும். பசலி முழுவதும் பிடித்தம் செய்த தொகை பசலி முடிந்தவுடன், ஒப்பந்தப்புள்ளிதாரரால் திருக்கோயிலுக்கு இழப்பேற்பட்டுள்ளதாவென முடிவு செய்து, இழப்பேற்பட்டிருப்பின் இழப்பு தொகையினை பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகையினை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். இழப்பேற்படாவிடில் பிடித்தம் செய்துள்ள தொகை முழுவதும் வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

26. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலித்து சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரால் ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு அனுமதி வழங்கப்படும் வரை, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தப்புள்ளிதாரா்கள் செலுத்தியுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.

27. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஆணையரால் அங்கீகரிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிதாரா் தவிர மற்ற ஒப்பந்தப்புள்ளிதாரா்கள் செலுத்தியிருந்த ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

28. 1432ம் பசலி தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று அதில் பித்தளை விளக்குகள் கொள்முதல் செய்த வகையில் தணிக்கை ஆட்சேபணை ஏதுமில்லையென்று அறிவித்த பின்னரே ஒப்பந்தப்புள்ளிதாரா் செலுத்தியுள்ள வைப்புத் தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டிருப்பின் அதனை பிணை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து மீதி தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

29. ஒப்பந்தப்புள்ளிதாரா் பித்தளை விளக்குகள் ஏற்கனவே இதர நிறுவனங்களுக்கு விநியோகம் செய்தவராக இருக்க வேண்டும்.

30. சப்ளை செய்ய வேண்டிய பித்தளை விளக்குகள் விவரம்

1. உயரம் 13 செ.மீ.
2. அடிவட்ட அகலம் 7 செ.மீ.
3. மேல் வட்ட அகலம் 9 செ.மீ.
4. எடை 250 கிராம்
5. பித்தளை விளக்கின் முன்புறம் "தங்கரத சுவாமி உருவப்படம் நன்கு தெரியும் வண்ணமும், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி" என்ற எழுத்துக்களும்" பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.
6. பித்தளை விளக்கில் Copper 62 to 65 %, Zinc 38 to 35% என்ற சதவிகிதம் கலந்து இருக்க வேண்டும். வேறு உலோகங்கள் கலத்தல் கூடாது.

31. ஒப்பந்தப்புள்ளிதாரா் தனது கணக்கு எண் அட்டை ( PAN CARD ) நகல் இணைக்கப்படவேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

32. ஒப்பந்தப்புள்ளி தொகையானது, அரசால் நிர்ணயக்கப்படும் வருமான வரி விற்பனை வரி மற்றும் இதர வரிகளை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளிதாரரின் ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

33. 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரா் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433 பசலி டெண்டர் கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும்பட்சத்தில் இதே விலைக்கு தொடர்ந்து பித்தளை விளக்குகள் சப்ளை செய்ய வேண்டும்.

34. திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுபவர்கள் திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக் கட்டணம் நிலுவை வைத்துள்ளவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ஒம்) நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

17/6/2022
மேலாளர்

13/6/22